1990 ஏப்ரல் 17]

10–10 மணி

திரு. க. பழனிசுவாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எடப்பாடி அரசு பொது மருத்துவமனையில் ஆபரேஷன் தியேட்டர் இருக்கின்றது. எக்ஸ்ரே பிரிவு புதிதாகத் துவங்கப்பட்டு இருக்கின்றது. ஆனால் நோயாளிகளுக்கு ஆபரேஷன் செய்வது என்றால் அவர்களை சேலம் மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்புகிறார்கள். அதை மாற்றி, அங்கேயே ஆபரேஷன் செய்ய எம். எஸ். பட்டப் படிப்பு படித்த டாக்டர்களை நியமிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கே நியமிக்கப்பட்டு இருக்கின்ற மூன்று மருத்துவர்களில் ஒரு எம்.எஸ்.-ஐ நியமிப்பதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொன்மலைக் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

*6472 திருமதி பாப்பா உமாநாத்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) பொன்மலைக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் துவக்கப்பட்டு எந்த நிலையில் உள்ளது?

(ஆ) அதனை துரிதப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) பொன்மலைக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் துவக்கப்பட்டு பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன.

(ஆ) பணிகளைத் துரிதப்படுத்த தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. அந்தப் பணிகள் 1991ஆம் ஆண்டு ஜூனுக்குள் நிறைவேற்றப்படும். இந்தப் பதிலினை மாண்புமிகு உறுப்பினரவர்கள் குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளோடு கலந்து பேசி அன்றே முடிவெடுத்திருக்கிறார்கள். ஆகவே, அதை விரைவுபடுத்துவதற்கான பல்வேறு முயற்சிகளை எடுத்திருப்பது குறித்தும் உறுப்பினரவர்களுக்குத் தெரியும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் குடிநீர்த் திட்டம் துவக்கப்பட்டு ஏறத்தாழ 10 ஆண்டுகள் ஆகின்றன. சென்ற கால ஆட்சியின் போது வெறும் தண்ணீர் டாங்க் மட்டும் கட்டி வைத்து, மெயினாக இருக்கக்கூடிய ஆற்றில் கிணறு வெட்டும் அந்த ஏற்பாடு, 'ஹெட் ஒர்க்' பண்ணாமல் விட்டுவிட்டார்கள். இப்போது அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்கள் இரண்டு மைலுக்கு அந்தப் பக்கம் காவிரி ஆறு ஓடியும்கூட, குடிக்கத் தண்ணீர் இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் சொன்னது போல, துரிதப்படுத்தப்பட்டிருக்கிறது என்பது உண்மை தான். அதை இன்னும் விரைவுபடுத்துவதற்கு அரசு முயற்சி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவர் அவர்களே, மேலும் விரைவுபடுத்துவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி பாப்பா உமாநாத்: பிரதான திட்டம் நிறைவேற கால அவகாசம் ஆகும் என்பதால் இடைக்காலத்தில் ஒரு திட்டம் கொண்டு வரப்பட்டு அதுவும் இரண்டு வருடங்களாக இழுத்தடிக்கப்படுகிறது. இவ்வாண்டு ஜூன் மாதம், ஜூலை மாதத்திற்குள்ளாக முடிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அமைச்சரவர்கள் மாதம் ஒரு முறை, குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளைச் சந்திப்பது என்ற ஒரு நல்ல முடிவை எடுத்திருந்தாலும்கூட, அவர் தொடர்ந்து அதைக் கண்காணித்து துரித நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(விடை இல்லை).

சினிமா படப்பிடிப்பில் இறக்க நேரிடும் தொழிலாளர்களுக்கு உதவி தொகை.

*6629 திரு. பெ.சு. திருவேங்கடம்:

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சினிமா படப்பிடிப்பில் தொழிலாளர்கள் இறக்க நேரிட்டால் அவர்களுக்கு உதவித் தொகை வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?